# குழந்தைகள் பாதுகாப்பு குறித்த கல்வி

## பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான தகவல்கள்

| | |
|---|---|
| பாடசாலையின் பெயர்<br>Name of school | |
| பங்குபற்றும் வகுப்பு(கள்)<br>Participating Year/s | |
| ஒரு வாரத்திற்கான பாடங்களின் எண்ணிக்கை<br>Number of lessons per week | |
| பாடசாலைத் தொடர்பு நபர்<br>School contact person | |
| தொடர்புத் தொலைபேசி இலக்கம்<br>Contact telephone number | |

அன்புடைய பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு

இந்த ஆண்டு, மேலே சொல்லப்பட்டுள்ள ஆண்டுகளுக்கான வகுப்புகளில் பயிலும் மாணவ-மாணவியர்கள் கட்டாயப் பாடமான 'ஆளுமை வளர்ச்சி, சுகாதாரம் மற்றும் உடற்பயிற்சிக் கல்வி' (Personal Development, Health and Physical Education (PDHPE)) -யில் ஈடுபாடு கொள்வார்கள்.

எமது பாடசாலையின் - PDHPE திட்டத்தில் கட்டாயப் பாடமான 'குழந்தைப் பாதுகாப்பு குறித்த கல்வி' உள்ளடங்கும். 'குழந்தைப் பாதுகாப்பு குறித்த கல்வி'-யில் போதிக்கப்படும் சில பாடங்கள் உணர்வுபூர்வமான சில விடயங்களைப் பற்றியதாகும். மாணவ-மாணவியரது வயதிற்கேற்ற முறையில் பாடசாலை இந்தப் பாடங்களைப் போதிக்கும்.

'குழந்தைப் பாதுகாப்பு குறித்த கல்வி'-யில் போதிக்கப்படும் இந்தக் குறிப்பிட்ட உள்ளடக்கங்கள் அடுத்த பக்கத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது.

'குழந்தைப் பாதுகாப்பு குறித்த கல்வி'-யைப் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு 'கல்வித் திணைக்கள'த்தின் PDHPE வலைத்தலத்தில் உள்ள Child protection and respectful relationships education ('குழந்தைப் பாதுகாப்பு மற்றும் கண்ணியமான உறவுமுறைகள் கல்வி') எனும் பகுதிக்குச் செல்லுங்கள்.

இந்தப் 'பருவ'த்தில் ஒரு வாரத்திற்குப் போதிக்கப்படும் 'குழந்தைப் பாதுகாப்பு குறித்த கல்வி' பாடங்களின் எண்ணிக்கை மேலே சொல்லப்பட்டுள்ளது.

உங்களுக்கு மேலதிகத் தகவல்கள் தேவைப்பட்டால், மேலே சொல்லப்பட்டுள்ள இலக்கத்தில் பாடசாலைத் தொடர்பு நபருடன் தொடர்புகொள்ளுங்கள்.

## 'தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை'

பாடசாலையுடன் தொடர்புகொள்வதில் உங்களுக்கு உதவ மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் உங்களுக்குத் தேவைப்பட்டால், 13 14 50 -இல் 'தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை'-யுடன் தொடர்புகொண்டு உங்கள் மொழியில் மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் தேவை என்று கேளுங்கள். தொலைபேசி இயக்குனர் பாடசாலையை அழைத்து, உரையாடலில் உங்களுக்கு உதவ மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரை இணைப்பிற்குக் கொண்டுவருவார். இந்த சேவைக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படமாட்டாது.

உங்கள் உண்மையுள்ள

பாடசாலை அதிபர் (Principal)

‘குழந்தைப் பாதுகாப்பு குறித்த கல்வி’யில் போதிக்கப்படும் பாடங்களில் உள்ளடங்குவன:

The content which will be covered in child protection education includes:

(Staff to tick the relevant boxes below for Stage 4 content.)

- ☐ அக்கறையும் கண்ணியமும் மிக்க தொடர்புறவுகள்
  Caring and respectful relationships
- ☐ வெவ்வேறு தொடர்புறவுகளுக்கான உரிமைகளும் பொறுப்புகளும்
  Rights and responsibilities in different relationships
- ☐ அதிகாரத் துஷ்ப்பிரயோகம்
  Abuse and power
- ☐ பாலினப் படிவார்ப்புகள் (stereotypes)
  Gender stereotypes
- ☐ பாதுகாப்பான மற்றும் பாதுகாப்பற்ற சூழ் நிலைகளில் உங்கள் உடல் புரியும் எதிர்வினைகளை ஏற்றுக்கொள்ளல்
  Trusting your body’s response to safe and unsafe situations
- ☐ தொடர்புறவுகள் மற்றும் இது குறித்த அதிகாரம் ஆகியவற்றின் மீது குடும்பத்தினர், ஊடகங்கள் மற்றும் சம-வயதினர் செலுத்தும் செல்வாக்கு
  Influence of family, media and peers on power and relationships
- ☐ உதவி நாடும் விதம்
  How to access help
- ☐ ஆதரவுதவி சேவைகள்
  Support networks
- ☐ ஓரினச் சேர்க்கை வெறுப்பு மற்றும் இனவெறியை உள்ளடக்கிய அச்சுறுத்தல் மற்றும் தொல்லைப்படுத்தல்
  Bullying and harassment, including homophobic bullying and racism
- ☐ பாதுகாப்பாக இருப்பதற்கான யுக்திகள்
  Protective strategies to stay safe
- ☐ நெருக்கமான தொடர்புறவுகளில் சம்மதத் தெரிவிப்பை ஏற்றலும் அதைப் புரிந்துகொள்ளலும்
  Acknowledging and understanding consent in intimate relationships